நல்லூர் இணை நூலகம்



நல்லூர் இணை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 சித்திரை 05 ஞாயிற்றுக்கிழமை (18-04-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 141

# தெரிவுக்குழு யோசனைக்கு திருத்தங்கள் வருகின்றன!

## வெள்ளியன்று கூடும்போது ஆராயப்பட்டு இறுதி வடிவம்

கொழும்பு, ஏப்ரல் 18

இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளைக் கண்டறிந்து சிபார்சு செய்வதற்கென நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக் குழு எதிர்வரும் வெள்ளிக்கிழமை 23 ஆம் திகதி மீண்டும் கூட இருக்கிறது.

அப்போது, தெரிவுக் குழு தனது இடைக்கால அறிக்கையில் வெளியிட்ட வடக்குக்கும் கிழக்குக்கும் தனித்தனியான சமஷ்டி அலகுகளை அமைக்க வேண்டும் என்ற யோசனைக்குப் பல திருத்தங்கள் சமர்ப்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தத் திருத்தங்களையும் ஆராய்ந்தே தெரிவுக்குழு தனது அறிக்கைக்கு இறுதி வடிவம் கொடுக்கும் என்று அவதானிகள் தெரிவித்தனர்.

சமஷ்டி அரசியல் முறையை அரசமைப்புச் சட்டத்தில் சேர்த்துக் கொள்வது அல்லது

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பிக்கு எதிராக எதிர்க்கட்சி போர்க்கோலம்

### ஆயுதம் வைத்திருக்க எதிர்ப்பு

கொழும்பு பார்க் வீதியில் உள்ள ஈ.பி.டி.பி. பணிமனையில் தங்கி உள்ள சுமார் 40க்கு மேற்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர்களிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும் அல்லது அவர்கள் யுத்தம் நடைபெறும் வடக்கு - கிழக்கு மாகாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்தல் ஆணையாளரிடம் எதிர்க் கட்சியினர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஜனாதிபதிக்கு எதிராக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## இயக்கச்சியில் மோதல்

யாழ்ப்பாணம், ஏப். 18

இயக்கச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளி மாலை 5.30 மணியளவில் விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்காப் படையினருக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றன.

இந்த மோதல்களின் போது இராணுவத் தரப்பில் இழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகள் தரப்பில் லெப்டினன்ட் அன்பழகன் அல்லது கிருபன் (முருகன் ரவி — பெரியபுலோ, சுழிபுரம்) என்ற போராளி வீரமரணமடைந்தார். (ஓ)

## மருதனார்மடத்தில் இருந்து மேதினப் பேரணி புறப்படும்

### எழுச்சித் தினமாகக் கொண்டாட முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 18

எதிர்வரும் மே 1 ஆம் திகதி நடைபெற உள்ள மேதினப் பேரணி மருதனார்மடத்தில் இருந்து பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகி காங்கேசன்துறை வீதியூடாக யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் முடிவடையும். அங்கேயே அன்றைய மேதின பொதுக்கூட்டமும் இடம்பெறும்.

நேற்றுக் காலை விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் நடைபெற்ற கலந்துரையாடலில் மேற்கண்டவாறு தீர்மா

(6 ஆம் பக்கம் பார்க்க)

### குடாநாட்டில் நடப்பது

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இராணுவ நடவடிக்கையாம்

கொழும்பு, ஏப் 18

யாழ். குடாநாட்டில் தற்சமயம் மட்டுப்படுத்தப்பட்ட இராணுவ நடவடிக்கை இடம்பெற்று வருவதாக கூட்டுப் படைகள் தலைமையகப் பேச்சாளர் ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்.

இயக்கச்சிப் பகுதியில் படையினர் தமது காப்பரண்களில் இருந்து முன்னேறும் ஒரு முயற்சியாக அங்கு சிறு இராணுவ நடவடிக்கை ஒன்றில் ஈடுபட்டதாகவும் அந்தப் பேச்சாளர் மேலும் சொன்னார். [ஓ]

## உணர்வு மேலிட்ட நிலையில் அன்னை பூபதிக்கு அஞ்சலி

யாழ்ப்பாணம், ஏப். 18

அன்னை பூபதியின் ஐந்தாம் ஆண்டு நினைவு நிகழ்வுகள் இன்றும் நாளையும் மிகப் பரவலாகவும், அதி சிரத்தையுடனும் மக்களால் கொண்டாடப்பட உள்ளன.

தமிழர் விடுதலைக்காக அன்னை தனது இன்னுயிர் ஈந்த தினம் நாளையாதலால் அவருக்கு அஞ்சலி செலுத்தும் உணர்வு மேலிட்டு எங்கும் அதற்கான பல்வேறு ஏற்பாடுகளை மக்கள் செய்துவருகின்றனர்.

இறுதி நாள் நிகழ்ச்சிகளை நடத்துவதற்காக குடாநாடு முழுவதும் எழிற்கோலம் பூண்டு வருகிறது. மக்கள் தமது அஞ்சலியை அடக்கமாகவும் அமைதியாகவும் அதேவேளை சிறந்த முறையிலும் நிகழ்த்த முன்னின்று முனைப்புடன் செயற்படுகிறார்கள்.

இன்றைய பிரதான உண்ணாவிரத நிகழ்வுகள் பின்வரும் இடங்களில் நடைபெற உள்ளன;-

நல்லூர் திருநெல்வேலி தலங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## மோட்டார் வாகனங்களை பதிவுசெய்ய நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 18

மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் நடவடிக்கையை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு ஆரம்பிக்க இருக்கிறது.

முதல் கட்டமாக யாழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட மோட்டார் வாகன உரிமையாளர்களுக்கான பதிவு இடம்பெறும்.

மோட்டார் வாகன குற்றச்செயல்களில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கும், வாகன மோசடிகளைத் தவிர்ப்பதற்கும் இந்த நடவடிக்கை உதவும் என்று போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

### சுவாமி அவதூறு வழக்கு:

## ஜெயலலிதாவை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

சென்னை, ஏப். 18

தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா புதுடில்லி நீதிமன்றத்தில் எதிர்வரும் ஜூலை 9 ஆம் திகதி ஆஜராக வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம்சுவாமி, செல்வி ஜெயலலிதா மீது தொடுத்திருந்த அவதூறு வழக்குத் தொடர்பாகவே நீதி மன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது:

''இந்தியா ருடே'' சஞ்சி

( 6 ஆம் பக்கம் பார்க்க)

## முருங்கனில் குண்டுவீச்சு! ஒருவர் பலி; வீடுகள் சேதம்

மன்னார் மாவட்டம், முருங்கன் பரிகாரக்கண்டல் பகுதியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை 8 மணியளவில் இரு பொம்மர்கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை நடத்தின.

இந்தச் சம்பவத்தில் அப்பாவித் தமிழர் ஒருவர் உயிரிழந்தார். ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது. மேலும் சில வீடுகளும் சேதமடைந்தன. உடைமைகள் பல நாசமாகின.

இரு பொம்மர்களும் குடியிருப்புப் பகுதிகள் மீது ஆறு குண்டுகளை வீசின என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு வீச்சில் அதேபகுதியைச் சேர்ந்த போ. பாலுநாகி (50 வயது) என்பவரே உயிரிழந்தார். மேலும் இருவர் காயமடைந்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமையும் முருங்கன் பகுதியில் புக்காரா விமானம் ஒன்று குண்டு வீச்சு நடத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிர்ப்பு விழாவை முன்னிட்டு
**திருமறைக் கலாமன்றம்**
வழங்கும்

# "நாதமும் கீதமும்"

(மெல்லிசை நிகழ்ச்சி)

காலம்: 18 - 04 - 93 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: மாலை 6.45 மணி
இடம்: மன்ற அரங்கு

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

(சி/5004)



## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்
வேலணைப்பிரிவு.

16 - 04 - 1993இல் இழுக்கப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டில் பரிசு பெற்ற சீட்டுக்கள் விவரம்:

01. 0836  02. 3880  03. 0722
04. 0457  05. 2943

பரிசுக்குரியவர்கள் உடனடியாக வேலணைப் பிரிவுப் பணிமனையில் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்துப் பரிசுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும்.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
17 - 04 - 1993.

(சி-5001)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 — 06 — 1926
மறைவு: 18 — 04 — 1992

### அமரர் S. ஆலாலசுந்தரம்

(ஓய்வு பெற்ற விவசாய போதனாசிரியர்)

உங்கள் பிரிவால் துயருறும் நாங்கள் உங்கள் பண்பான குணங்களையும் அன்பான வார்த்தைகளையும் நினைத்து, மரணம் உடலுக்கன்றி ஆத்மாவுக்கல்ல எனத் தேறி உங்கள் ஆத்மா சாந்திபெற தினமும் இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

உங்கள் அன்பு மனைவி,
பாசமிக்க மகள்,
மற்றும் சகோதரன் குடும்பம்,
சகோதரி குடும்பம்,
மைத்துனர்கள், மைத்துனிகள்

2, கச்சேரி ஒழுங்கை,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

(25296)

## அஞ்சலி



தோற்றம்: 22 — 02 — 1931
மறைவு: 13 — 04 — 1993

அமரர்

### வேலுப்பிள்ளை பூவிலிங்கம்

புன்சிரிப்புத் தவழுகின்ற புனித உள்ளம்
பூவிலிங்கப் பெரியோனின் புகழ் இமயம்
இன்னொருவர் இவர்க் கீடு இல்லை உண்மை
எழிலாகப் புத்தகங்கள் கட்ட வல்லோன்
பேரேடு ஆய்வுக் கட்டுரைகள் கட்டும்
பழைய தலைமுறையுன்னோ டொழிந்ததையா
அன்புள்ள "பூவிலிங்கம் அண்ணா" உங்கள்
ஆத்மா நற்சாந்தியுற வேண்டுகின்றோம்.

உரிமையாளர், ஊழியர்,
பாரதி பதிப்பகம்
(A. B. Printers)

430, காங்கேசன்துறை, வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-5003)

## ஆலயங்களில்

கோப்பாய் கண்ணகை அம்மன் கோவில் வருடாந்த குளிர்த்தி வைபவம் நாளை திங்கட்கிழமை நடைபெறும்.
(க-72)

o o o

வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் வருடாந்த உற்சவம் 22ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. அடுத்த மாதம் 5ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.
(க-155)

o o o

கரைப்பிரான் ஆதி விநாயகர் கோவில் தேர்த்திருவிழா 20ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் தீர்த்தத் திருவிழா 21ஆம் திகதி புதன்கிழமையும் நடைபெறும். (க)

o o o

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவில் வருடாந்தமகோற்சவ பூசைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்கு ஆரம்பமாகும். 21ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றம் இடம்பெறும்.

மே மாதம் 4ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 5ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (க 30)

o o o

கொழும்புத்துறை கிழக்கு ஸ்ரீ முத்துமாரி அம்பாள் கோவிலின் வருடாந்த மணவாளக்கோல மகா கும்பாபிஷேக உற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 10மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறும்.
(க-30)

o o o

அரியாலை புனித யூதா ஆலயத் திருவிழா 16ஆம் திகதி ஆரம்பமாகியது. திருநாள் திருப்பலி 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6-30மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும். (க)

## இன்று

ஸ்ரீ ரமணமகரிஷியின் 44 ஆவது மகா சமாதிக் குருபூசைத் தினம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலையத்தில் நடைபெறும்.
(க)

## வீரவணக்க கூட்டம்

கொழும்புத்துறை, ஏப் 18

வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பிரதேசத்தில் 3ஆம், 4ஆம் மாதங்களில் வீரச்சாவெய்திய 42 மாவீரர்களுக்கான வீரவணக்கக் கூட்டம் ஒன்று எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7-30 மணிக்கு வடமராட்சி வடக்கு கடற்புலிகள் பொறுப்பாளர் திரு. சங்கீதன் தலைமையில் சுப்பர் மடம் ஸ்ரீ சித்தி விநாயகர் விளையாட்டு அரங்கில் நடைபெறும்.

சுப்பர் மடம் கிராமிய கடல் தொழிலாளர் சங்கம் இதனை ஒழுங்கு செய்துள்ளது.
(க-30)


A/L 95

PURE/APP.

MR. P. கமலசிங்கம்

ஆரம்பமாகியுள்ளது.

SHAMROCK

யாழ். சுண்டுக்குளி

(25294)


# புலிகளுடன் பேச்சுக்கள்; பிரட்மன் கூறிய கருத்து

கொழும்பு, ஏப். 17

கொழும்பில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை போன்று, விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை நடத்தும் சாத்தியமில்லை.

ஜனாதிபதியின் வெளியுறவுச் செயலாளர் பிரட்மன் வீரக்கோன் முன்கண்டவாறு செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கொழும்பில் தமிழ்க் கட்சிகளுடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தைகளை "விஷயத்தை அறிந்து கொள்ளும் ஒரு நடவடிக்கை"யே என்று திரு. வீரக்கோன் வர்ணித்தார்.

இதுபோன்ற ஒரு நடவடிக்கையாக அடுத்த கட்டமாக விடுதலைப் புலிகளுடன் தாம் பேசக்கூடும் என்ற சாத்தியத்தை அவர் மறுதலித்தார்.


## அறிவித்தல்

### கோப்பாய் சித்திரவேலாயுத சுவாமி கோவில் இடைக்கால நிர்வாக சபை

மேற்படி கோவிலை நிர்வகிப்பதற்கு யாழ். அரச அதிபரால் இலக்கம் ஏஈ/ரி/277 26-3-1993 தேதிய கடிதமூலம் கீழ்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

16-04-1993 வெள்ளிக்கிழமை தொடக்கம் இக்கோவில் குறிப்பிட்ட நிர்வாகத்தின் மேற்பார்வையில் இயங்கும் என்பதை அறியத்தந்து சகலரும் நிர்வாகத்திற்கு பூரண ஒத்துழைப்பு நல்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

1. திரு. ஏ. மயில்வாகனம், கோப்பாய் தெற்கு — தலைவர்
2. திரு. க. ச. முத்துவேல், கோப்பால் வடக்கு — உப - தலைவர்
3 திரு இ இராசரத்தினம், கோப்பாய் வடக்கு — செயலாளர்
4. திரு வே. பே. செல்லையா, இருபாலை — உப - செயலாளர்
5 திரு வே சின்னத்தம்பி, நீர்வேலி — உறுப்பினர்
6 திரு. த. இராசரத்தினம், இருபாலை — உறுப்பினர்
7. திரு. செ, ஐயாத்துரை, உரும்பராய் — உறுப்பினர்

தங்கள் நம்பிக்கையுள்ள
இ இராசரத்தினம்
கௌரவ செயலாளர்
இடைக்கால நிர்வாகசபை

கோப்பாய் வடக்கு,
கோப்பாய்
16-04-1993

(சி/5007)



## முக்கிய அறிவித்தல்

### யாழ். குருநகர் வர்த்தகர் சங்கத்தின் பொதுச்சபைக் கூட்டம்

எதிர்வரும் 21 - 04 - 93 புதன்கிழமை பி. ப. 3-30 மணியளவில் குருநகர் சந்தை வடக்கு இல. 5 காரியாலயத்தில் தலைவர் திரு. மி. யேசுதாசன் அவர்கள் தலைமையில் கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்திற்கு குருநகர் எல்லைப் பிரதேசத்தில் உள்ள பெரிய சிறிய வர்த்தக ஸ்தாபன உரிமையாளர்கள் அனைவரையும் சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறை யாழ். மாவட்ட தொழிற்சங்க உறுப்பினர்களும், குருநகர் பகுதி கடற்புலிகளின் அரசியல்துறை உறுப்பினர்களும் சமுகம் கொடுப்பார்கள்.

மி. யேசுதாசன்
தலைவர்

க சி. கிருஷ்ணன்
செயலாளர்

(சி/5006)



## அறிவித்தல்

### கணக்கு மீதிகளைச் சரி பார்த்தல்

30-06-91 திகதியிலும் 30-06-92 திகதியிலும் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துடனான கொடுக்கல், வாங்கல்கள் சார்பான மீதிகளை தங்கள் கணக்குகளுடன் சங்க மீதிகளைப் பார்வையிட்டு 18-04-93 — 30-04-93 க்கிடையில் சீர்செய்து கொள்ளுமாறும், உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

30-04-93 க்கு பின் சங்கப் புத்தகங்களின் படியே மீதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

நன்றி.

பொதுமுகாமையாளர்,
(சி/5005) வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டில் தி.மு. கவுக்கே இப்போது ஆதரவு அதிகம்

## ''த வீக்'' சஞ்சிகையின் கருத்துக் கணிப்பில் தகவல்

சென்னை, ஏப். 18

தமிழகத்தில் கடந்த மாத பிற்பகுதியில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பின்படி, தி. மு. க. மக்களின் பெரும் பான்மை ஆதரவைப் பெற்றிருக்கிறது.

ஆங்கில வார இதழான ''த வீக்'' சஞ்சிகை நடத்திய கருத்துக் கணிப்பின்படி—

தி. மு. க - 54 வீதம், அ. தி. மு. க. - 31 வீதம், காங்கிரஸ் - 8 வீதம், ஏனைய கட்சிகள் 3 வீதம் மக்கள் ஆதரவு இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. 4 வீதமானோர் இன்னமும் முடிவு செய்யவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

இந்தக் கருத்துக் கணிப்பின் பிரகாரம்—

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி அமைத்துப் போட்டி இட்டாலும் தி. மு. கவைத் தோற்கடிப்பது மிகக் கஷ்டமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம்—

ஜெயலலிதா அரசு உடனடியாகக் கலைக்கப்படவேண்டுமா என்ற கேள்விக்கு ஆம் என்று 48 வீதமானோரும், இல்லை என்று 49 வீதமானோரும் பதிலளித்துள்ளனர்.

அ. தி. மு. க. — காங்கிரஸ் கூட்டணி பிரிவுபட்டதை 69 வீதமானோர் வரவேற்றுள்ளனர். 29 வீதமானோர் கூட்டணி முறிவடைந்திருக்கக் கூடாது என்று தெரிவித்தனர். இரண்டு வீதமானோர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கவில்லை.

தி. மு. க. — காங்கிரஸ் கூட்டு ஏற்படுவதை 69 வீதமானோர் எதிர்க்கின்றனர். 25 வீதமானோர் வரவேற்றனர்.

— இத் தகவல்களை ''த வீக்'' சஞ்சிகை வெளியிட்டுள்ளது. (உ)

## வடபகுதி உப்பள ஊழியர் சம்பளம்

வடபகுதியில் உள்ள உப்பளங்களில் கடமைபுரியும் ஊழியருக்கு 1992ஆம் ஆண்டில் வழங்கப்படாதிருந்த மாதாந்தச் சம்பளத்தை மொத்தமாக வழங்க இப்போது இறைசேரி நிதி ஒதுக்கியுள்ளது.

இத் தகவலை உப்புக் கம்பெனியின் உற்பத்தி முகாமையாளர் திரு ரி. இராமநாதன் தெரிவித்தார். (இ-எ)

# இலங்கையில் துன்பகர நிலை இனியும் தொடராதாம்!

## டாக்காவில் ஜனாதிபதி பேச்சு

டாக்கா, ஏப். 18

இலங்கையில் துன்பகர நிலை இனியும் தொடராது.

ஜனாதிபதி பிரேமதாஸா கொழும்பு திரும்புவதற்கு முன்னர் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் வைத்து செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதில் அரசாங்கம் தீவிர அக்கறை கொண்டுள்ளது.

இதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் அறிக்கையை அரசு அக்கறையோடு எதிர்பார்த்து உள்ளது என்றும் அவர் தெரிவித்தார். [த-எ]


மலர்ந்த சித்திரை புத்தாண்டில் அனைவருக்கும்

**எமது இனிய நல்வாழ்த்துக்கள்**

**வாங்கிடுவோம் பனை வெல்லம்·**
**வளர்ந்திடுவோம் சுயசார்பில்!**

தரமான, சுத்தமான, தித்திக்கும் வெல்லங்களை வாங்க நாடுங்கள்:

★ **பனை வெல்லம்** ★

சகல தெங்கு ப. பொ. உ. வி. கூ. சங்கத் தலைமை அலுவலகங்கள்,
சகல தெங்கு ப. பொ. கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணித் தலைமை அலுவலகங்கள்,
மத்திய சந்தைப்படுத்தல் பிரிவுக் களஞ்சியத்திலும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

★ மொத்த விலை 1 கிலோ ரூபா 38-00
★ சில்லறை விலை 1 கிலோ ரூபா 40-00

**வெல்லம்: சில்லறை விற்பனவு நிலையங்கள்**

| | | |
|---|---|---|
| 01. | வலிகாமம் கொத்தணி: | வலி கொத்தணி விற்பனவு நிலையம் / வலி கொத்தணி சித்த ஆயுள் வேத மருந்தகமும, விற்பனை நிலையமும், பிரதான வீதி, சங்கானை. |
| 02. | யாழ் பகுதி கொத்தணி: | சுண்டிக்குளி பல்பொருள் அங்காடி, சுண்டிக்குளி பாலசிங்கம் விடுதி உணவுச் சாலை, யா/ பல்கலைக்கழகம். |
| 03. | சமாசம்: | சந்தைப்படுத்தல் பிரிவு, வடமாகாண தெ. ப. பொ சமாசம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 04. | அரியாலைச் சங்கம்: | அரி கோப். பனம் பொருள் அங்காடி, மாம்பழம் சந்தி, அரியாலை. |
| 05. | யாழ்ப்பாணம்: | பனம் பொருள் விற்பனவு நிலையம், நாவலர் வீதி, நாவாந்துறை. |
| 06. | கோப்பாய் | கூட்டுறவு அங்காடி, இருபாலைச் சந்தி, இருபாலை. |
| 07. | மானிப்பாய் சங்கம்: | மானி. - கோப். வைத்தியசாலை முன்பாக, மானிப்பாய். |
| 08. | கோண்டாவில்: | கற்பகதரு விற்பனை நிலையம் / கற்பக களஞ்சியம், தாவடிச் சந்தி, கோண்டாவில். |
| 09. | சங்கானை: | பனம் பொருள் விற்பனை நிலையம், அராலி வீதி, சங்கானை. |
| 10. | அளவெட்டி/ மல்லாகம் | கற்பகதருவின் விற்பனை நிலையம், ஸ்ரேசன் வீதி, சுன்னாகம். |
| 11. | சாவகச்சேரி சங்கம்: | பொற்பதி விற்பனை நிலையம், இல; 2, பஸ் நிலையம், சாவகச்சேரி. |
| 12. | கொடிகாமம்: | சேவை நிலையம், கச்சாய் வீதி, கொடிகாமம். |
| 13 | பளை: | பனம்பொருள் விற்பனவு நிலையம், பஸ் நிலையம், பளை. |
| 14. | அச்சுவேலி: | கற்பகம் மொத்த விற்பனை நிலையம், அச்சுவேலி. |
| 15. | கட்டைவேலி | பனையகம், கொடிகாமம் வீதி, நெல்லியடி. |
| 16. | பருத்தித்துறை: | மொத்த விற்பனவு நிலையம், பரு தெ. ப. பொ. கூ. சங்கம், மந்திகை. |

விளம்பர அமைப்பு:

வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி,

★ வட்டு. தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை.
★ பண்டத்தரிப்பு பரிஷ் தெ. ப. பொ. உ. வி. கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு.
★ கோண்டாவில் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்.
★ மானிப்பாய் பரிஷ் தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய்.
★ தெல்லிப்பழை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.
★ சுன்/அள/மல்லாகம் தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்.

(சி-4850)



**விக்னா** கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

**95** கலை, வர்த்தகம்

இன்று **18 — 04 — 1993** 7-15 மணி


பொருளியல் — திரு. கனாகரன்
வர்த்தகம் — திரு. தேவா
கணக்கியல் — திரு. S. K. பிரபாகரன்
அளவையியல் — திரு. விக்கி

இவ்வருடம் III மட்டுமே ஆரம்பமாகும். அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும்.

(சி-4925)


## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 22 — 09 — 1953



மறைவு: 18 — 04 — 1992

**Dr. பரமேஸ்வரன் சிறீதரன்**
(M. B. B. S.)
(முன்னாள் வைத்திய அத்தியட்சகர் கூட்டுறவு வைத்தியசாலை, மூளாய்)

திதி: 07 - 05 - 1993

அன்பின் உருவாய், பண்பின் பிறப்பிடமாய், பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! கண்ணை இமை காப்பது போல எம்மையெல்லாம் காத்தீரே! காலத்தின் கோலத்தால் காலன் உமை அழைத்து ஆண்டு ஒன்று சென்றாலும், உங்கள் பொன்னான நினைவுகள் எம்மை விட்டு என்றுமே அகலாது.

உங்கள் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கும்.

- குடும்பத்தினர்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு, மானிப்பாய் (25263)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

அழகிய பொமனேரியன் நாய்க்குட்டிகளும், உயர்ரக கறுப்பு அல்சேஷன் நாய்க்குட்டிகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 48/1, முதலாம் ஒழுங்கை, (மக்ரவல் லேன்,) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(25278)

ஹைலைன் பிறவுண் பேட்டு குஞ்சுகள் மொத்தமாகவும், சில்லறையாகவும் உடன் விற்பனைக்குண்டு. "மல்லிகாபதி" சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய்.
(6116)

7 ஸ்ரீ 5696 வெஸ்பா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு தொடர்பு: Bond Institutes 58A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(25283)

அடைவைப்பதற்குகந்த Japanese, Bantom, Spangles, Freezil, சிலம்பு Bantom முட்டைகளும் ஒரு கிழமை, ஒரு மாதத்துக்கு உட்பட்ட மேற்குறிப்பிட்ட குஞ்சுகளும் உடன் விற்பனைக்குண்டு. 70/6, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
(6120)

J. V. C. ஸ்ரீறியோ செற் (யப்பான்) அவுட்புட் (30W) வோல்ற்ரேஜ் 15V-DC சிசில் குளிர்சாதனப்பெட்டி R80, - R60 மண்எண்ணெய் குக்கர், அவிண் (Oven), கட்டில் (பெரிது), தொட்டில் (Cradle), மேசை மற்றும் 2அங் x 2அங் x 4அடி மஞ்சவண்ணா றீப்பைகள் விற்பனைக்குண்டு. இல. 166, சேர். பொன். இராமநாதன் வீதி, திருநெல்வேலி தெற்கு.
[25289]

## O/L MATHS

G. C. E. O/Lஇல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும் இருபத்தாறு வருட அனுபவமுடைய அசிரியரினால் நாற்பது மணித்தியாலங்களில் (Distinction) பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், இல 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி.
(25285)

Distinction பெறுபேறடைய வாரம் ஐந்து மணித்தியாலங்கள். ஆண்டுகள் 10, 9 உட்பட முப்பது வருட அனுபவமுள்ள B Sc. (Cey) ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல. 85 சிவன்கோவிலடி, திருநெல்வேலி.
(25288)

## மணப்பெண் தேவை

வயது 30, பூரம் (செவ்வாய் 7இல்) M. Sc. எஞ்ஜினியர், மகாவலித் திட்டத்தில் கடமையாற்றுபவருக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. G. குணரட்ணம், இல. 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(25292)

வயது 32, மூலம், B Sc எஞ்ஜினியர், தொழில் நுட்பக் கல்லூரியில் விரிவுரையாளராகக் கடமையாற்றுபவருக்கு படித்த, அழகிய மணப்பெண் தேவை. G. குணரட்ணம், இல 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(25 91)

## வீடு, காணி விற்பனைக்கு

அல்வாய் தெற்கு, குமிழடிப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் கிணறு, வீட்டுடன் காணி மூன்று லாச்சம், 9½ குழியும், அருகில் வெற்றுக் காணி இரண்டு லாச்சம் பதினைந்து குழியும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. காசிப்பிள்ளை, துலாவை, அல்வாய் தெற்கு, அல்வாய்.
[25290]

## மணமகன் தேவை

அத்த நட்சத்திரம், செவ்வாய் தோஷமற்ற இருபத்தொன்பது வயது, இந்து, விஞ்ஞானப் பட்டதாரி பயிலுநர் ஆசிரியைக்குப் பொருத்தமான மணமகன் தேவை. தகுந்த சீதனம் கொடுக்கப்படும். இல. 518, மே/பா உதயன், யாழ்ப்பாணம்.
(25293)

---

## யாழ். பல்கலைக்கழக தொழிலாளர் பதவி (தரம் III)

02 - 05 - 1993இல் நடைபெறவுள்ள இப்பதவிக்கான போட்டிப் பரீட்சைக்குரிய

## விசேட பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்:- 18 - 04 - 1993
(இன்று) பி. ப. 2. 00 மணி


பாடநெறி: பொதுஉளச்சார்பு

★ தொடர்ந்து 10 நாட்கள் (நாளாந்தம் 2 மணித்தியாலங்கள்)
★ அச்சடித்த பாடக்குறிப்புகள்.
★ நாளாந்தக் கட்டணம் ரூபா 25 மட்டுமே.

**அஸ்ரன் கல்வி நிறுவனம்**
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகாமையில்)
(சி-4927)

---

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



ஜனனம்; 15 — 05 — 1924
சிவபதம்; 20 — 03 — 1993

## அமரர் சின்னவி அப்புக்குட்டி

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய் விளங்கிய அன்புத் தந்தையே! ஆண்டுகள் பல சென்றிடினும், தங்கள் அன்பு முகம் என்றும் நிலைத்திருக்கும், உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக்கிரியையில் கலந்து கொண்டவர்கள், உதவியவர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாளை (19-04-1993) திங்கள் நடைபெறவிருக்கும் வீட்டுக் கிரியைகளிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர், அயலவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- குடும்பத்தினர்.

சரஸ்வதி இல்லம்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். [25287]

---

# ACCOUNTANCY CLASSES

C. I. M. A. STAGE - I
A. A. T. — PRELIM
— INTER
I. A. B. — FOUND
— INTER

ஆரம்பம்: 24 - 04 - 1993

**NORTH CEYLON TECHNICAL INSTITUTE**
14, St. Peter's Lane, Jaffna.
[சி-4928]

---

## 35ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம்: 13 — 12 — 1933
மறைவு: 15 — 03 — 1993

## திருமதி சத்தியபாமா தருமலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

திதி: 18 — 04 — 1993

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்;

அன்பு மகள் திருமதி நிரஞ்ஜனி பாலசுந்தரம் (கனடா), சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிமார் மற்றும் நண்பர்கள், மாணாக்க சிறார்கள்.

"திருமகள் வாசம்",
வட்டுக்கோட்டை. (25286)

---

## ஓராண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 21 — 04 — 1898
இறப்பு: 29 — 04 — 1992

## அமரர் சின்னையா மாரிமுத்து

(நயினாதீவு - 7)

திதி: 18 — 04 — 1993

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் நினைவு எம் இதயங்களில் என்றும் பிரகாசித்துக் கொண்டே இருக்கும். உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

— குடும்பத்தினர்.

பொன். சற்குணானந்தன்,
"சித்ராஸ்",
முள்ளி வீதி, அரியாலை. (25279)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம் யாழ்ப்பாணம்

## உதயன்

### ஊடலைப் போக்க நடக்கும் முயற்சிகள்!

இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒன்றைக் கண்டறிவதற்காக நியமிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு எதிர் வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் கூட இருப்பதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த மாதம் நடைபெற இருந்த அதன் அமர்வு (இறுதி அமர்வு?) திடீரென ஒத்தி வைக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு இருபது மாதங்களுக்கு மேலாகக் கூடி ஆராய்ந்து, இணைந்திருக்கும் தமிழர் தாயகத்தை துண்டாடும் ஒரு யோசனையை வகுத்தது. சிங்கள அரசியல் கட்சிகளின் எண்ணங்களை மட்டுமே பிரதிபலிக்கும், தமிழருக்கு விரோதமான அந்த யோசனையை கொழும்பில் இயங்கும் தமிழ்க் கட்சிகளும் நிராகரித்துவிட்டன. தெரிவுக் குழுவில் இருந்து வெளியேறவும் தீர்மானித்தன.

கொழும்புத் தமிழ்க் கட்சிகளின் இந்த நிலைப்பாடு அரசாங்கத்துக்குச் சங்கடத்தை உண்டாக்கியது. சம்பந்தப்பட்ட தமிழ்க் கட்சிகளின் அனுசரணையுடன் ஒரு தீர்வை தமிழர்கள் மீது திணிக்கும் அதன் எண்ணத்தில் மண் விழுந்தது போலாயிற்று!

ஆகவே வடக்கு - கிழக்குப் பிரதேசங்களுக்குத் தனித்தனி சமஷ்டி அலகுகள் என்ற யோசனையில் அற்ப சொற்பமான அர்த்தமில்லாத சிறுமாற்றங்களை அல்லது திருத்தங்களைச் செய்து தமிழ்க் கட்சிகளின் ஊடலை முடிவுக்குக் கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொள்வதற்கு அரசு விரும்பியது. அதனாலேயே கடந்த மாத இறுதியில் நடைபெற இருந்த தெரிவுக்குழு அமர்வு நடக்கவில்லை.

தமிழ்க் கட்சிகளின் ஊடலைப் போக்கித் தன்வசமாக்கி அணைத்துக் கொள்ளும் அரசின் முயற்சிக்குதான் ஜனாதிபதியின் ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் தமிழ்க் கட்சிகளுடன் நடத்தி வரும் பேச்சுகள். வடக்கு - கிழக்கை மேற்பார்வை செய்வதற்கு உப ஜனாதிபதி ஒருவரை நியமித்தல், வடக்கு மாகாணத்தின் எல்லைகளை மீளத் திருத்தி அமைத்தல், அரசமைப்புச் சட்டத்தின் 13ஆவது திருத்தத்தில் சில மாற்றங்களைச் செய்தல் போன்ற சில்லறைகளை வீசி, தமிழ்க்கட்சிகளின் கோபத்தைத் தணிப்பதற்குப் பிரயத்தனம் நடந்து கொண்டிருக்கிறது.

அரசின் மயக்கும் மொழிகளால் கவரப்பட்டு, தமிழ்க் கட்சிகள் தமது ஊடலை முறித்துக் கொண்டு அரசுடன் கூடுமா இல்லையா என்பது இனித்தான் தெரிய வேண்டும். தமிழர் தாயகக் கோட்பாட்டை விற்று, தமிழ் மக்களின் அடிப்படை அரசியல் அபிலாசைக்கு விலை பேசி, அரசுடன் கொஞ்சிக் குலவிச் சுகபோகம் (சுயநலன்) கொள்ள அவை முடிவு செய்தால் அதுவே அவர்களின் அரசியல் அந்தகாரமாகிவிடும். இதனை அக்கட்சிகள் உணர்ந்து கொள்ளும் என்றே நம்புகிறோம்.

எது எவ்வாறாயினும், தமிழ் மக்கள் தன்னாட்சி, தனியாட்சி என்ற தமது நிலையிலிருந்து மனந்தளர்வு அடையாதிருக்கும் வரை சிங்களத் தலைவர்களாலும், அரசாலும் தமிழருக்குப் பாதகமான தீர்வு ஒன்றைத் திணிக்க இயலாது. அரசும், தெற்குத் தலைவர்களும் இதனை எப்போது உணர்கிறார்களோ அப்போது தான் அவர்களால் நாடு இரண்டாவதைத் தடுக்கமுடியும்.

# தமிழகத்தில் அ.தி.மு.க. ஆட்சி தற்செயலாக ஏற்பட்டதே!

## வாழப்பாடி அறிக்கை

சென்னை, ஏப். 18

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. ஆட்சி, தற்செயலாக ஏற்பட்டதாகும்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி சென்னையில் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழல் நிறைந்த அ.தி.மு.க. ஆட்சியை தமிழகத்தில் இருந்து அகற்ற களம் அமைக்கப்பட்டு விட்டது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

இதே வேளை —

தமிழ்நாடு காங்கிரஸின் இரு பிரிவுகளின் தலைவர்களான வாழப்பாடி ராமமூர்த்தியும், கருப்பையா மூப்பனாரும் சென்னையில் நேற்று மாலை நடைபெறவிருந்த காங்கிரஸ் பொதுக்கூட்டம் ஒன்றில் ஒரே மேடையில் பேசுவதாக காங்கிரஸ் தலைமைப்பீடத்தினால் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டிருந்தது. (த-எ)

## நாளை முதல் வேட்பு மனு ஏற்கப்படும்

சென்னை, ஏப். 18

தமிழ்நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதி மற்றும் ராணிப்பேட்டை சட்டசபைத் தொகுதி ஆகியவற்றுக்கான இடைத்தேர்தல்களில் போட்டியிடுபவர்களிடமிருந்து வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படுவது நாளை திங்கள் ஆரம்பமாகிறது.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படும் கடைசித் திகதி இம்மாதம் 26 ஆம் திகதி ஆகும்.

இரண்டு இடைத் தேர்தல்களும் அடுத்தமாதம் 19ஆம் திகதி நடைபெறும் என்று தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

1991 பொதுத் தேர்தலின் போது இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் காலமானதால் பழனி நாடாளுமன்ற இடைத் தேர்தலும் —

அ.தி.மு.க. உறுப்பினர் காலமானதால் ராணிப்பேட்டை - சட்டசபை தொகுதி இடைத் தேர்தலும் நடைபெறுகின்றன. (இ-எ)

## அதிபர் தரம் 3க்கான நேர்முகப் பரீட்சை 30இல்

வெட்டுப் புள்ளி 83 இல் இருந்து 79க்கு குறைக்கப்பட்டவர்களுக்கான அதிபர் தரம் 3 பதவிக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 30 ஆம் திகதி நடைபெறும்.

அதற்கான கடிதங்கள் தபாலில் இடப்பட்டுள்ளதாகவும், அக்கடிதங்கள் கிடைக்காவிடினும், சம்பந்தப்பட்ட ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றலாம் எனவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளரால் விடுக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## நாளை

யாழ்ப்பாண பல்கலைக் கழக வெளிவாரி மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்குத் தொடர் நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகும். கலைத்துறை, வர்த்தகத்துறை முதலாம், இரண்டாம் வருட மாணவர்கள் அனைவரும் இக்கருத்தரங்கில் கலந்து கொள்ளவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. [க15-2-30]

## ஆடை ஏற்றுமதி மூலம் 5 ஆயிரத்து 60 கோடி ரூபா

கொழும்பு, ஏப் 18

ஆடை ஏற்றுமதி மூலம் கடந்த ஆண்டில் 5 ஆயிரத்து 60 கோடி ரூபா வருமானமாகக் கிடைத்தது

திறைசேரி பிரதிச் செயலாளர் கே. சண்முகலிங்கம் முன்கண்ட தகவலை தெரிவித்தார்.

இவ்வருமானம் கடந்த 1991 இல் 3 ஆயிரத்து 330 கோடி ரூபாவாக இருந்தது என்றும்— நாட்டிற்கு கூடுதல் வருமானத்தை பெற்றுத் தருவதில் ஆடை ஏற்றுமதி முதலாவது இடத்தை வகிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## விளையாட்டுநிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஏப். 18

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் ''டொனால்ட் கணேஷ குமார்'' ஞாபகார்த்த கிண்ணத்துக்கான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இன்று மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க அணியை எதிர்த்து ஸ்கந்தா விளையாட்டுக் கழக அணி மோதும். இந்த ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (உ)

o o o

ஷப்றா அணிக்கும் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணிக்கும் இடையிலான சிம்நகபூர்வ — மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள்—கிரிக்கெட் ஆட்டம் இன்று காலை 9 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகும். (உ)

o o o

சுன்னாகம் ஸ்கந்தா ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஸ்கந்தா மைதானத்தில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மல்லாகம் ஜொலி போய்ஸ் அணி மோதும். (உ-89)

யாழ் நகர் ஐங்கரன் விளையாட்டுக் கழகம் யாழ். ஆஸ்பத்திரி வீதி, அடைக்கல மாதா கோயிலுக்கு முன்னால் உள்ள கழக மைதானத்தில் நடத்தி வரும் மட்டுப்படுத்தப்பட்ட 20 ஓவர்களைக் கொண்ட கிரிக்கெட் ஆட்டத் தொடரில் இன்று நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:-

★ காலை 8-30 மணி: வட்டபிளே வி. க. அணி எதிர் பாரதி இளைஞர் வி. க. அணி.

★ பிற்பகல் 2-30 மணி:- ஐங்கரன் வி. க. அணி எதிர் கிறீன் கோல்ட் வி. க. அணி.

ஐங்கரன் வி. க. மைதானத்தில் இன்று மாலை நடைபெறும் ''செற் அப்'' முறையிலான கரப்பந்தாட்டப் போட்டித் தொடரில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ பி. ப. 3 00 மணி:- பாரதி ''பி'' அணி எதிர் கே. கே. எஸ். ''ஏ'' அணி.

★ மாலை 4-30 மணி:- கே. கே. எஸ். ''பி'' அணி எதிர் சென், அன்ரனீஸ் ''ஏ'' அணி. (உ)

## ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சை மீள்பரிசீலனை விண்ணப்பம் மே 30 வரை அனுப்பலாம்

கொழும்பு, ஏப். 18

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட ஜி. சீ. ஈ. (சாதாரண) தர பரீட்சையின் விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்களை பரீட்சைத் திணைக்களம் அடுத்த மாதம் 30 ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளும்.

பத்திரிகைகளில் பரீட்சைத் திணைக்களம் வெளியிட்டுள்ள மாதிரிப் படிவங்களுக்கு அமைய மாணவர்களே விண்ணப்பங்களைத் தயாரித்து அனுப்பி வைக்கமுடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-க)

## இலங்கை வங்கிச் சட்டம் விரைவில் திருத்தப்படும்!

கொழும்பு, ஏப். 18

இலங்கை வங்கிச் சட்டம் திருத்தப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

நாட்டில் உள்ள தனியார் மற்றும் வர்த்தக வங்கிகளின் அதே நிபந்தனைகள் மற்றும் விதிகளின்படி சுயாட்சி நிறுவனமாக இலங்கை வங்கி இயங்குவதற்கு இலங்கை வங்கியின் சட்டதிட்டங்களில் மாற்றம் செய்வதற்கு அரசாங்கம் இணங்கியுள்ளது.

அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்புப் பத்திரிகை ஒன்று இச்செய்தியை வெளியிட்டுள்ளது. (த-எ)

## பரீட்சை

சித்தாந்தப் பண்டிதர் பரீட்சை எதிர்வரும் 23ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை வண்ணை நாவலர் மகா வித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை அறிவித்துள்ளது. (க)

# வீரப்பனையே பிடிக்க திணறுவோர் எம்மை அழிக்க நினைக்கின்றனர்

## தொடர் உண்ணாவிரத நிகழ்வில் உரை

சந்தனக்கட்டைக் கடத்தல்காரன் வீரப்பனைப் பிடிக்க முடியாத இந்திய ராணுவம் எம்மை அழிக்க முயல்கின்றது.

''றோ'' அமைப்பின் ஊடாக 500 உளவாளிகளையும் அது இங்கு அனுப்பியுள்ளது. கடந்த காலங்களில் இந்தியா எமக்கிழைத்த கொடுமைகளை எமது மக்கள் இன்னமும் மறந்துவிடவில்லை.

அன்னை பூபதியின் நினைவாக யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் காலை 7-00 மணிக்கு ஆரம்பமான தொடர் உண்ணாவிரதத்தின் முதல் நாள் நோன்பை முடித்துவைத்துப் பேசிய விடுதலைப் புலிகள் அமைப்பின் யாழ். மாவட்ட பிரசாரப் பிரிவைச் சேர்ந்த திரு. கலையரசன் இவ்வாறு கூறினார். [illegible] மணிக்கு உண்ணாவிரதிகளுக்கு தீவகக்கோட்டத் தளபதி திரு. வல்லவன் நீராகாரம் வழங்கி உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்.

திரு. கலையரசன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

நாம் இன்று கடலிலும் காவியம் படைக்கும் சக்தி பெற்றுள்ளோம். கிளாலிக் கடலாயினும் எல்லைக் கடலாயினும் அப் பகுதிகளில் இலங்கை இந்தியக் கடற்படைக் கப்பல்கள் நுழையத் தயங்குகின்ற அளவுக்கு வளர்த்துள்ளது எமது போராட்டம். தமிழினத்தின் விடிவுக்கு வழி சமைக்கும் வான் படையையும் அமைக்கும் நிலைக்கு நாம் வளர வேண்டும்.

இன்று நாங்கள் தனியரசை, [illegible] சென்று கொண்டிருக்கின்றோம். அதற்காக பல்வேறு துறைகளிலும் சாதனைகளை ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு எல்லா மக்களுக்குமே உரியது.

அன்னைபூபதி பற்றிக் கூறுகையில் அவர் ''உலகத்தில் முதன் முறையாக அகிம்சைப் போரில் கலந்து தமது இனத்தின் விடிவுக்கும் சுதந்திரத்திற்கும் தம்மை அர்ப்பணித்த பெண்மணி அன்னை பூபதி ஆவர். இதன் மூலம் அவர் ஒரு புதிய பாதையை எமது இனத்துக்குக் காட்டியுள்ளார்'' என்றார்.

உண்ணாவிரதத்தின் முதல் நாளான அன்று பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டு அன்னை பூபதிக்கு அஞ்சலி செலுத்தினார்கள். (த-க-111)

## தியாக வேள்வி

ஆதிக்க விதைகள்
ஈழத்தில் முளை விட்ட
போது
கிள்ளி யெறிந்த
புயற்காற்று.........
இந்தப் பூபதி.........!

எம் மீது
ஊன்றிய பாதங்களை
உரு வெடுக்க விடாது
புரட்டி விட்ட
பூகம்பம்.....
இந்தப் பூபதி...... !

ஈழத்திற்காய்
தேசத்தின் நெருப்பை
பசியாக
தன் வயிற்றில் சுமந்த
தியாக வேள்வி.........
இந்தப் பூபதித்தாய்.

—''செந்தாளன்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்வு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காவில் பிள்ளையார் கோவில்

யாழ். முலவைச் சந்தி

சண்டிலிப்பாய் சுதுமலை அம்மன் கோவில்

உடுவில் முருகமூர்த்தி கோவிலடி

சங்கானை பஸ் நிலையம்

கைதடி நாவற்குழி ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம் முன்பாக

நுணாவில் மேற்கு பொன்னம்மான் குடியேற்றத்திட்டம்

கரவெட்டி கிழவிதோட்டம் பிள்ளையார் ஆலயம்

பருத்தித்துறை ஆத்தியடி பிள்ளையார் கோவில்

யாழ். இந்துக்கல்லூரி

இவற்றைவிட கிராம, வட்ட மட்டங்களில் பல்வேறு இடங்களில் உண்ணாவிரத நிகழ்வுகள் இடம்பெற உள்ளன.

உரும்பராய் அன்னை பூபதி கலையரங்க மண்டபம், கைதடி மறவன்புலோ சனசமூக நிலையம் மற்றும் சனசமூக நிலையங்கள், பொது அமைப்புகள், கூட்டுறவுச் சங்கங்களில் அவ்வப் பகுதி மக்கள் அடையாள உண்ணாவிரதம் அனுஷ்டிக்க உள்ளனர்.

இறுதி நாளான நாளை உண்ணாவிரத நிகழ்வைத் தொடர்ந்து பிரதான நினைவஞ்சலிக் கூட்டம் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது.

நாளைய தினம் வர்த்தக நிலையங்கள், சந்தைகள் என் மூடப்பட்டு அவற்றில் பணிபுரியும் சகலரும் உண்ணாவிரதத்திலும் கூஞ்சலிக் கூட்டத்திலும் கலந்துகொள்வர்.

குடாநாட்டின் எல்லாப் பகுதிகளில் இருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் நாளை யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் கூடுவர். விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலரும் இக்கூட்டத்தில் உரையாற்றுவர்.

கோட்ட மட்டத்திலான பிரதான நினைவஞ்சலிக் கூட்டங்களும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களில் நடைபெற உள்ளன. (அ-162 117)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் லட்சுமி

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும் தற்போது அரச வீதி உரும்பிராயை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் லட்சுமி 17-04-93 நேற்று காலமானார்.

அன்னார் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், கிருஷ்ணலீலா, தங்கமலர், புஸ்பமலர், சிவமலர், (ஜேர்மனி) ரேணுகா (இத்தாலி), சிவகௌரி, ரவி (சுவிஸ்), கருணாகரன் (ஜேர்மனி), சாந்தலிங்கம் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலம்சென்ற வ மகாலிங்கம் (உரிமையாளர், அம்பாள் ஸ்ரோர்ஸ், களுவாஞ்சிக்குடி), திருநாவுக்கரசு (வயாவிளான்), குணசிங்கம் (டுபாய்), சிறீதரபாலன் (ஜேர்மனி], குகதாஸ் (இத்தாலி, கமலேஸ்வரன் (ஜேர்மனி), சரஸ்வதிதேவி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் அவரது அரச வீதி இல்லத்தில் இன்று [18-04-93] நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3.00 மணியளவில் உரும்பராய் மயானத்துக்கு தகனத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

T. ஆறுமுகம்
அரச வீதி,
உரும்பராய் கிழக்கு.

க. திருநாவுக்கரசு
[மருமகன்]

((5891)

## திருமதி மதியாபரணம் சிவசுப்பிரமணியம்

திருமதி மதியாபரணம் சிவசுப்பிரமணியம் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி, முன்னாள் யாழ். மாநகரசபை அங்கத்தவர், சமாதான நீதிவானுமாகிய] வை. சிவசுப்பிரமணியத்தின் அருமை மனைவியும், யுவராணி, நித்தியானந்தராணி, ஸ்ரீ விக்னேஸ்வரராஜ் (ஜேர்மனி, முன்னாள் பொலீஸ் இன்ஸ்பெக்டர்), ஸ்கந்தகுமாரி (ஆசிரியை, இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை) ஆகியோரின் அருமைத் தாயாரும், செ. வேலாயுதபிள்ளையின் (ஓய்வுபெற்ற பிரதி ஆணையாளர், தொழில் திணைக்களம் கொழும்பு) அன்புச் சகோதரியும், அ. மகாதேவா (ஓய்வுபெற்ற கூட்டுறவு உதவி ஆணையாளர், உதவி அரசாங்க அதிபர் சண்டிலிப்பாய், சங்கானை சமாதான நீதிவான். டாக்டர் சதா முத்துக்குமாரசாமி, சறோஜினி - ஸ்ரீ விக்னேஸ்வரராஜ் (ஜேர்மனி), இராமலிங்கம் (உள்நாட்டு இறைவரி உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமியாரும், தேவகி (லண்டன்), சூரியபிரபா (லண்டன்), சதா லோகிதசிவா (விஜயரத்னா அன்கோ பட்டயக்கணக்காளர்), திலகசக்தி (இராமநாதன் நுண்கலைக் கல்லூரி), தர்மசுந்தரி (கலைப்பிரிவு, யாழ். பல்கலைக் கழகம்), மாபிரேமசாந்தி (சென்னை இராணி மேரி கல்லூரி), சுபவினோதி (இராமநாதன் மகளிர் கல்லூரி, பம்பலப்பிட்டி), அபிராமி (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி], சிவராமி (இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), சிவரமேஸ் (மாணவன், ஜேர்மனி]. அபயலிங்கம் (கணக்காளர்), ஸ்கந்தகுமார் (கணனி ஆலோசகர், லண்டன்] ஆகியோரின் பேத்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (18-4-93) பிற்பகல் 4.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்வீர்களாக.

தகவல்:

66, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

அருணாசலம் மகாதேவா
(மருமகன்)

[25297]

## மருதனார்மடத்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விகப்பட்டது.

யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தலைமையில் இக் கலந்துரையாடல் நடைபெற்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் இங்கு உரைநிகழ்த்துகையில், எதிர்வரும் மே தினம் வட தமிழீழத்தின் எழுச்சித் தினமாக அமைய வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பொருளாதாரத் தடை, கல்வி வசதிகள் புறக்கணிப்பு ஆகியவற்றுக்கு மத்தியிலும் உற்சாக உணர்வுகள் உள்ளதாக இப்பேரணி அமைய வேண்டும் என்றும் அவர் கூறினார்.

எவ்வளவு நெருக்குதல்களுக்கு மத்தியிலும் நாங்கள் எங்களை இசைவாக்கம் செய்து எவ்வாறு சூழலோடு ஒத்துப்போகிறோம் என்பதை ஸ்ரீலங்கா அரசுக்கும் உலகுக்கும் வெளிக்காட்டுவதற்கு இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார்.

அங்கு எடுக்கப்பட்ட மற்றும் சில முக்கிய தீர்மானங்கள் வருமாறு:-

★ விடுதலைப் புலிகளின் இராணுவ அணிவகுப்பைத் தொடர்ந்து கூட்டுறவுப் பகுதியினதும், கல்வி பகுதியினதும் அதனைத் தொடர்ந்து கோட்டங்களினதும் அணிவகுப்புகள் இடம்பெறும்.

★ பேரணியில் தமிழீழ தேசியத் தலைவரது படம் மற்றும் கரும்புலிகள், தியாகி திலீபன், அன்னை பூபதி, தளபதி கிட்டு, மாவீரர்கள், முதல் முதல் வீரச் சாவடைந்த பெண் போராளி, ஆண் போராளி ஆகியோரது படங்கள் எடுத்துச் செல்லப்படும்.

★ ஊர்திகள் செல்லும் வழியில் வீதிச் சோடனைகள் அறுபடுவதையும் ஊர்தி பழுதடைவதையும் தவிர்க்க ஊர்தியின் ஆகக் கூடிய உயரம் 12 அடி ஆகவும், நீளம் 24 அடி ஆகவும், அகலம் 11 அடி ஆகவும் இருக்கும்.

★ தாக சாந்தி நிலையங்கள் — பேரணி தொடங்கும் இடம், தாவடி, பேரணி முடியும் இடம் ஆகிய 3 இடங்களில் மட்டுமே அமைக்கப்படும்.

★ ஊர்திகள் கண்ணைக் கவரும் வர்ணத்துடனும், மக்களுக்கு போராட்டம், மே தினம் சம்பந்தமான செய்திகளை சொல்கின்றனவாகவும் இருத்தல் வேண்டும்.

★ ஊர்திகளுக்கு உரிய அமைப்புக்களின் பெயர் விவரங்கள் ஊர்தியின் முன்னும் பின்னுமாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

★ ஊர்தியில் கதாபாத்திரங்கள் தவிர வேறு எவரும் இருக்கக்கூடாது.

★ 20 ஆம் திகதி முதல் மேதினத்திற்கான பதாகைகள், சுவரொட்டிகள் தொங்கவிடப்பட வேண்டும். 30 ஆம் திகதி முதல் ஒலிபெருக்கி அறிவிப்புகள் விடுக்கப்பட வேண்டும். (இ-162)

## மோட்டார்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வினர் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் வாகனப் பதிவு தொடர்பான மேலதிக விவரங்களுக்கு கோண்டாவிலில் அமைந்துள்ள மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகத்துடன் (முன்னைய வடபகுதிக்கு வெளியே செல்வோருக்கான அனுமதி வழங்கும் செயலகம்) தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-162)

### தற்கொடையாளி அன்னை பூபதி

# பொது அறிவுத் தேர்வு பரிசளிப்புவிழா நாளை

விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினால் கடந்த 30-3-93 அன்று தற்கொடையாளி அன்னை பூபதி நினைவாக வட தமிழீழப் பாடசாலைகளில் நடத்தப்பட்ட பொதுஅறிவுத் தேர்வில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு அன்னை பூபதி நினைவு நாளான நாளை 9 ஆம் திகதி அன்று மாவட்டம் தோறும் பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.

### சிறப்புத் தேர்ச்சி

ஆண்டு 7, 8, 9, 10, 11 12, 13 என 6 பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் பொது அறிவுத் தேர்வில் யாழ் மாவட்டத்திலிருந்து 25,000 மாணவர்களும் கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களிலிருந்து 10,000 த்துக்கும் மேற்பட்ட மாணவர்களும் தோற்றியிருந்தனர்.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு தேசிய ரீதியாக முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட இருக்கின்றன. அத்துடன் யாழ். மாவட்டத்தில் 6 மாவட்டங்களிலும், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

யாழ் மாவட்டத்திலுள்ள 6 கோட்டங்கலிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கும் தேசிய பரிசுகளைப்பெறும் மாணவர்களுக்கும் நாளை காலை 10 மணிக்கு உரும்பராயில் அமைந்துள்ள அன்னை பூபதி கலையரங்கில் வைத்து பரிசுகள் வழங்கப்பட இருக்கின்றன.

அனைத்துப் பாடசாலை அதிபர்களையும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பெற்றோர்களையும் விழாவுக்கு வருகை புரியுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் அழைக்கின்றனர்.

பரிசுகளைப் பெறும் மாணவர்கள் பெயர் பட்டியல் முழுவதும் நாளைய பத்திரிகையில் வெளிவரும். (இ)

# பாட்டாளி கட்சியின் நிலை; ராமதாஸ் முடிவு எடுப்பார்

சென்னை, ஏப். 18

பழனி மற்றும் ராணிப்பேட்டை தொகுதிகளில் நடைபெறவிருக்கும் இடைத் தேர்தல்களில் பட்டாளி மக்கள் கட்சியின் நிலை என்ன?

இதற்கான முடிவு எடுக்கும் அதிகாரம் கட்சியின் நிறுவுநர் டாக்டர் ராமதாஸுக்கு வழங்கப்பட்டுள்ளது.

திண்டிவனத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

பாட்டாளி மக்கள் கட்சி தனித்துப் போட்டியிடுமா அல்லது எந்தக் கட்சிக்கு ஆதரவு வழங்கும் என்பது குறித்து டாக்டர் ராமதாஸ் இன்னும் சில தினங்களில் அறிவிப்பார். (ஒ)

## ஈ.பி.டி.பிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் குற்றப் பிரேரணை கொண்டு வரப்பட்ட சமயம் அரசுக்கு சார்பான சுவரொட்டிகள் கொழும்பில் ஒட்டப்படுவதற்கு ஈ.பி.டி.பியினர் பயன்படுத்தப்பட்டனர் என்று தேர்தல் ஆணையாளரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் கலைக்கப்பட்ட மாகாணசபை உறுப்பினர்களாகவிருந்து தற்போதைய தேர்தலில் வேட்பாளர்களாக நிறுத்தப்பட்டிருப்பவர்கள் பலரிடம் வழங்கப்பட்டுள்ள ஆயுதங்கள் உடனடியாக மீளப்பெறுமாறு எதிர்க்கட்சியினர் நேற்று பொலிஸ் மா அதிபரிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

எதிர்க் கட்சி வேட்பாளர்கள் சிலர் துப்பாக்கிப் பயமுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கின்றனர் என்றும் பொலிஸ் மா அதிபரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## ஜெயலலிதாவை..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு செல்வி ஜெயலலிதா அளித்த பேட்டி ஒன்றினால் தமது புகழுக்கு களங்கம் ஏற்பட்டுள்ளதாக சுப்பிரமணியம் சுவாமி நீதி மன்றத்தில் குற்றஞ் சாட்டியுள்ளார்.

முன்னாள் பிரதமர் சந்திரசேகரிடம் இருந்து பெரும் தொகைப் பணத்தை சுப்பிரமணியம் சுவாமி பெற்றுக் கொண்டார் என்றும்—

அந்தப் பணத்தை தமக்குக் கொடுப்பதாகவே சுப்பிரமணியம் சுவாமி பெற்றுக்கொண்டிருந்தார் என்றும்— செல்வி ஜெயலலிதா "இந்தியா டுடே" பேட்டியில் தெரிவித்திருந்தார்.

செல்வி ஜெயலலிதாவுடன் சம்பந்தப்பட்ட சஞ்சிகையின் பத்திரிகையாளர்கள் மூவரையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ)

## தெரிவுக்குழு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அதற்கேற்ற விதத்தில் திருத்தம் ஒன்றைக் கொண்டு வருதல், அல்லது அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் சில மாற்றங்களைக் கொண்டு வருதல் ஆகிய விடயங்களுக்கு வெள்ளிக்கிழமைக் கூட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்படும் என்று தெரியவருகிறது.

இந்தியப் பாணியிலான சமஷ்டி அமைப்பு என்பதற்கான உரிய வடிவமைப்பு எது என்பது குறித்தும் தெரிவுக் குழு பரிசீலனை செய்யும் என்றும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவை இரண்டையும் விட வடக்கு மாகாணத்தின் எல்லைகளை மீள அமைப்பது, வடக்கு, கிழக்கு நிர்வாகத்தை மேற்பார்வையிட உப ஜனாதிபதி ஒருவரை நியமித்தல், இப்போது மாகாணசபைக்குரிய அதிகாரங்களின் பட்டியல்களில் மாற்றம் செய்து சில துறைகளில் பூரண அதிகாரங்களை வழங்குதல் போன்ற திருத்தங்களையும் தெரிவுக்குழு பரிசீலனை செய்யும் எனத் தெரியவருகிறது.

இத்தகைய சூழ்நிலையில் எதிர்பார்த்தது போல மாகாணசபைத் தேர்தலுக்கு முன்னர் தெரிவுக் குழுவின் இறுதி அறிக்கை வெளிவர மாட்டாது என்றும்—

இன்னும் பல தடவைகள் குழு கூடும் என்றும்—சொல்லப்படுகிறது. (அ-1)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292 2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 18 - 04 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org